கிறார் என்பதற்காக ரத்துசெய்ய உத்தரவிடப்பட்டதாக அறிகிறேன். அதைப்போல திரு. துரை கோவிந்தராசன் அவர்களுடன் பால்ராஜ் என்பவரும், மார்க்கபந்து அவர்களுடன் துரைசாமி என்பவரும் தங்கியிருப்பதாக அறிகிறேன். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி தகவல் இல்லை, விசாரிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, அண்ணாசாலையில் உள்ள அரசினர் தோட்டத்தில் நமது மாண்புமிகு அமைச்சரின் பேரவை செயலர் அறிவித்ததுபோல கட்சித்தலைவர்களுக்கு மட்டும் வீடுகள் வழங்கப்பட்டிருப்பதைப் போல அல்லாமல் உறுப்பினர்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தவறு என்று சொல்ல மாட்டேன். ஆளுங்கட்சிக் கொரடாவுக்கும் கூட வீடு வழங்கப்பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சியை மதிப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே எதிர்கட்சிக் கொரடாவுக்கும்—ஏனென்றால் வேறு யாரும் கேட்கவில்லை ஆகையால் நானே கேட்கிறேன்—வீடு அளிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்றுநான் கூறவில்லை. கட்சித் தலைவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க அந்தக் கட்சியின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது என்றுதான் குறிப்பிட்டேன்.

கோடாறங்குளம், சிவந்திபுரம் இனும் கிராமங்கள்.

*வினா. எண்128—திரு. மெ. ஆண்டி அம்பலம் திரு. சோ. அழகர்சாமி மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுக்கா இனும் கோடாறங்குளம் கிராமம், சிவந்திபுரம் கிராமங்கள் அரசினரால் இனும் ஒழிப்பு சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டபின் கோர்ட்டு மூலம் கமிஷனர் நியமிக்கப்பட்டு குடிகளிடம் மேல் வாரம் வசூலிக்கப்பட்டு வருவது சம்பந்தமாக அரசு பரிசீலனை செய்ததா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை,

[1978 செப்டம்பர் 11

திரு. மெ. ஆண்டி அம்பலம்: இனிமேலாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, கேள்விக்கே இடம் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். இனி மேல் அதைப் பற்றி நடவடிக்கை எடுக்கும் நிலை வரவில்லை. இருந்தாலும் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இரண்டு கிராமங்களைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலூகாவில் இனும் கோடா றங்குளம், சிவந்திபுரம் என்ற இரு கிராமங்களைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். இந்தக் கிராமத்தில் இனுமை ரத்து செய்து முன்னாலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதிலும் கோடாறங்குளம் என்ற கிராமத்தை அரசு எடுத்துக் கொண்டு எல்லோருக்கும் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. சிவந்திபுரம் என்னும் கிராமத்தை அரசு எடுத்துக் கொள்ள முடியாமல் உயர்நீதி மன்றத்தில் வழக்கு இருக்கிறது. அதைப்பற்றி நட வடிக்கை எடுப்பதற்கு அரசுக்கு உத்தேசம் இல்லை.

[முற்பகல் 9-10]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கிராமங்களிலே கமிஷன்கள் மூலம் வாரம், குத்தகை வசூலிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்களுக்குத் தவறான தகவல் அளிக்கப்பட்டு இருக்கிறது. அந்த இரண்டு கிராமங்களிலும் கமிஷன் நியமிக்கப்பட்டு வாரங்கள் வசூலிக்கப் பட்டு வருகின்றன. அது என்னுடைய தொகுதியில் இருக்கிறது. கோடாறங்குளம் முன்னாள் உறுப்பினர் சங்குமுத்துத் தேவர் அவர்களின் சொந்த ஊர். சிவந்திபுரம் என்னுடைய சொந்த ஊர். நேரடியாகவே நாங்கள் பல முறை எடுத்துச் சொல்லி இருக் கிறோம். சட்டப்படி அங்கே சரியாகச் செய்யப்படவில்லை. பல கொடுமைகள் நடந்து இருக்கின்றன. இந்தச் சம்பவத்தைப் பற்றி விசாரித்து அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவ ரவர்களே, அங்கே வாரம் வசூலிப்பது அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வரப்படவில்லை. கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவரவர்களே, பழைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடத்திலும், தற்போதைய சட்ட அமைச்சர் அவர்களிடத் திலும் அது சம்பந்தமாக முறைகேடுகள் இருக்கின்றன என்று மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, அதற்கான பைல்களை வரவழைத்து அவைகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?